செய்யப்பட்டது. இந்த ஆய்வில், இங்கு அதிகப் போக்குவரத்து இல்லாத காரணத்தினால், நான்கு வழிச் சாலைகள் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. எதிர்வரும் காலத்தில் போக்குவரத்து செறிவு அதிகம் ஏற்படுகின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

156—

பால் குளிரூட்டும் நிலையம்

***21317—திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன் வந்தவாசி தொகுதியில் மொத்தம் 64 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இச்சங்கங்களில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 13,800 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, வந்தவாசி தொகுதியில் அமைந்துள்ள அணக்காவூர் பால் குளிரூட்டும் நிலையத்திற்கு வழங்கப்படுகிறது. அணக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம்

50,000 லிட்டர் பால் கொள்ளளவு கையாளும் திறன் கொண்டதாகும். தற்போது நாளொன்றுக்கு 20,000 லிட்டர் பால் மட்டுமே இங்கு கையாளப்படுகிறது.

எனவே, தற்போது அணக்காவூர் பால் குளிரூட்டும் நிலையத்தில் 50,000 லிட்டர் பால் வரை கையாளப்படும் திறன் உள்ளதாலும், தற்போது குறைந்த அளவே கையாளப்படுவதாலும் வந்தவாசி தொகுதியில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி, தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விலையில்லாத கறவை மாடுகள் அதிகமாக வழங்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும், அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள் கறவை மாடுகளை உபயோகித்து பால் அதிகமாக கறந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அந்தப் பகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதியிலுள்ள ஏழையெளிய மக்கள் அதனை நல்லமுறையில் பயன்படுத்தி, அதிகமான பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, வந்தவாசி தொகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க

விரும்புகிறாரோ, அந்த இடத்தில் பால் உற்பத்தி உயர்ந்து, தேவை ஏற்படின் மொத்த பால் குளிர்விப்பான் அல்லது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

தடுப்பணை

***6642—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செவிலிமேட்டில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், பாலாற்றில் செவிலிமேடு அருகில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்வியினை இங்கே எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களில் நீர்வளத்தைப் பெருக்க வேண்டும் என்றும், தமிழகம் அண்டை மாநிலத்தை நம்பியிருக்கின்ற காரணத்தினாலே, பல்வேறு வகைகளிலே நாம் மழை நீரைச் சேமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டதின்பெயரில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அந்தக் கோரிக்கை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*